Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

**2006** Public Examination

# Tamil

## Continuers Level

**Thursday 19 October: 2 p.m. Eastern Standard Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 50 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 50 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2006*

www.theallpapers.com

**Part A** (Questions 1–3)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space.

**Text 1**

1. What information will be given in the note? **3**

*Dear Dad*

*Vithuran*



www.theallpapers.com

Marks

You may make notes in this space.

**Text 2**

2. (a) Who are the audience and why is the speaker thanking Mrs Nallini? **2**

- ______________________________
- ______________________________

(b) How did Mrs Nallini reinforce her address to the audience? **2**

- ______________________________
- ______________________________

(c) How might the audience change their behaviour as a result of Mrs Nallini's address? **2**

- ______________________________
- ______________________________



www.theallpapers.com

Marks

You may make notes in this space.

**Text 3**

3. (a) Explain the changed accommodation arrangements for this year's annual function. **2**

- ____________________________________________________________
- ____________________________________________________________

(b) What were the purposes of last year's annual function? **2**

- ____________________________________________________________
- ____________________________________________________________

(c) List the activities planned for this year's function. **5**

- ____________________________________________________________
- ____________________________________________________________
- ____________________________________________________________
- ____________________________________________________________
- ____________________________________________________________



www.theallpapers.com

Marks | You may make notes in this space.

(d) What evidence is there that shows the good relationship between the Sydney and Melbourne associations? **2**

- ______________________________________________

  ______________________________________________

- ______________________________________________

  ______________________________________________



www.theallpapers.com

**Part B** (Questions 4–5)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information;*
- *convey the information accurately and appropriately.*

---

You will hear TWO texts, one relating to Question 4 and one relating to Question 5. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks** | You may make notes in this space.



**Text 4**

4. What is the purpose of this poem and how does the poet convey this? **3**

   கவிஞரின் நோக்கம் என்ன? அதனை அவர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________



www.theallpapers.com

Marks | You may make notes in this space.

**Text 5**

5. (a) Provide **two** reasons that explain why Siva migrated to Australia. **2**

சிவா அவுஸ்ரேலியாவுக்குக் குடிபெயர்ந்தமைக்குக் காரணங்கள் இரண்டு தருக.

- ____________________
- ____________________

(b) How was Siva's education encouraged and extended in Australia? **3**

அவுஸ்ரேவியாவில் சிவாவின் கல்வி எவ்வாறு ஊக்கப்படுத்தித் தொடரப்பெற்றது?

- ____________________
- ____________________
- ____________________

(c) How is Siva's current work important? **2**

சிவாவின் தற்போதைய வேலை எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது?

**End of Section 1**



www.theallpapers.com

Student/Registration Number | | | | | | | | | | | | Centre Number | | | | | | |

## 2006 Public Examination

# Tamil

## Continuers Level

## Section 2: Reading and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 15 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in blue or black ink or ball-point pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2006*

www.theallpapers.com

**Part A** (Questions 6–7)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and/or specific aspects of texts, by, for example, comparing, contrasting, summarising, or evaluating, and convey the information accurately and appropriately.*

---

6. Read the text and then answer in ENGLISH the questions that follow.

## அலை அலையான கண்டுபிடிப்புக்கள்

உலகின் ஆதிமுதல் நாகரிகம் எது? மெசப்பத்தேமியாவா? பண்டைய எகிப்திய நாகரிகமா? அல்லது பழைய சீனநாகரிகமா? இதற்கான விடை இதுவரை தெளிவாகவில்லை. ஆயினும் உலகெங்கும் தினமும் நிகழும் கண்டுபிடிப்புக்கள் புதிய புதிய தகவல்களைத் தந்துகொண்டு இருக்கின்றன. இருந்தபோதும் உண்மை இதுவரை வெளிப்படாமலேயே இருக்கிறது.

தமிழ் இலக்கிய ஆதாரங்களின் படி தென்னிந்தியாவுக்குத் தெற்கேதான் மிகமிகப் பழைய நாகரிகம் பரந்திருந்தது என்ற கருத்து நிலவுகிறது.

ஆரம்பகாலத்தில் இடம்பெற்ற தொல்பொருளியல் ஆய்வுகள் இத்தொன்மையான தமிழர் நாகரிகம் கிறிஸ்துவுக்கு முன் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று தெரிவித்தன.

பின்னர் இடம்பெற்ற ஆராய்ச்சிகள் இந்த நாகரிகம் கி.மு. 1700 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருக்கவேண்டும் என ஆதாரங்களுடன் வெளிப்படுத்தின. பின்னர் காபன் காலக்கணிப்பீடு (Carbon Dating) முதலிய உயர்வான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திச் செய்யப்பெற்ற ஆய்வுகள் தமிழர் நாகரிகம் குறிப்பிட்ட அதே இடத்தில் கிமு 4000 வருடங்களுக்கு முன் சிறப்புற்றிருந்தது என்று மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டின.

மேலும், பிரித்தானிய, ருஷ்ய, இந்திய விஞ்ஞானிகள் ஒன்றாக இணைந்து தென்னிந்தியாவின் கடலடித்தளத்தில் செய்த தொல்பொருள் ஆய்வுகளின்மூலம் இந்த நாகரிகத்தின் தோற்றம் கடந்த 11000 வருடங்களுக்கு முற்பட்டது என்று உறுதி செய்யப்பெற்றது.

கடலடித்தள ஆய்வானது நிதிவசதி போதாமையாலும், அதை வழங்குவதற்கான ஊக்கம் ஏற்படாமையாலும் கைவிடப்பெற்றமை கவலைக்குரிய விடயமாகும்.

இந்த நிலையில் அமெரிக்க விண்வெளி நிலையமான நாசா (NASA) செயற்கைக்கோள்களைப் பயன்படுத்திச் செய்த மிகநவீன, நுணுக்கமான ஆய்வுமுடிவுகள் அனைவரது கவனத்தையும் ஈர்த்தன. இம்முடிவின்படி இந்தியாவுக்கும் ஈழத்துக்கும் இடையில் உள்ள இராமர் அணை (Adam's Bridge) 1 750 000 வருடங்கள் பழமையானது எனவும், அது மனிதரால் ஆக்கப்பெற்றது எனவும் உறுதிப்படுத்தப் பெற்றுள்ளது. ஆச்சரியத்தைத் தரும் இந்த முடிவு வெளியிடப்பெற்ற பின்பும் ஆய்வுகளைத்தொடரும் ஊக்கம் ஏற்படவில்லை.

2004 இல் ஏற்பட்ட கடல்கோள் கடலின் வலிமையை நேரில் காட்டி உலகைப் பல வகையில் திகைப்படையச் செய்தது. அத்துடன் தமிழ்நாட்டின் கடற்கரையில் பெரும்பகுதி மணலை வாரிச்சென்று கருங்கல்லால் ஆன இரண்டு சிங்கங்கள் உட்பட பல தொல்பொருள் சான்றுகளை வெளியே தெரியச்செய்தது. இதன்மூலம் இந்திய நாகரிகம் பற்றிய சான்றுகளை மேலும் தந்து, ஆய்வுகளைத் தொடரவேண்டிய அவசிய தேவையையும் ஏற்படுத்தியுள்ளது.

இப்போதாவது உலகின் மிகப்புராதனமான நாகரிகம் எது? என்ற வினாவுக்குத் தீர்க்கமான விடை கிடைத்துவிட்டதா?



www.theallpapers.com

QUESTIONS

**Marks**

(a) 'Modern developments in technology can change our historical beliefs.' Give evidence from the text to support this statement. **2**

- ______________________________________________
  ______________________________________________
- ______________________________________________
  ______________________________________________

(b) Six 'Waves of Discovery' are mentioned in this text. Briefly explain how each one revealed something important. **6**

| Period | What was revealed |
|---|---|
| Before 300 years BC | |
| Pre 1700 BC | |
| Pre 4000 BC | |
| More than 11 000 years | |
| 1 750 000 years | |
| 2004 | |

(c) Why does the author doubt that the initial question can be answered? Give **two** reasons. **2**

- ______________________________________________
  ______________________________________________
- ______________________________________________
  ______________________________________________



www.theallpapers.com

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

## புராண இதிகாசக் கதைகளும் உண்மையாக நடந்தவையும்

மறைந்துபோன லெமோரியாக் கண்டம் பற்றிய கருத்து 19ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்ற பல ஆய்வுகளின் பின்னர் வெளியிடப்பெற்றது.

இந்தியாவிலும் மடகஸ்காரிலும் இருக்கின்ற நிலஅமைப்புக்கும் தாவரங்களுக்கும் இடையே உள்ள ஒத்த தன்மைகளை விஞ்ஞானிகள் அவதானித்தனர். இதன்படி இருநாடுகளையும் இணைத்திருந்த பெரிய ஒரு நிலப்பகுதி முன்னர் இருந்ததாக ஒரு கொள்கையை வெளிப்படுத்தினர். திடீரென ஏற்பட்ட இயற்கை அழிவினால் இந்த லெமோரியா நிலப்பகுதி கடலினுள் அமிழ்ந்து போயிற்று.




இற்றைக்கு ஒரு மில்லியன் வருடங்களாக இந்தியாவின் பல பகுதிகளில் மக்கள் வாழ்ந்தகாலத்தில் இலங்கையும் அதனுடன் சிலகாலம் இணைந்தும் சிலகாலம் துண்டிக்கப்பட்டும் இருந்தது. புவியின் காலநிலை மாற்றங்களால் ஏற்பட்ட கடல்மட்ட ஏற்றத்தாழ்வுகளே இந்த இணைப்புகளுக்கும் துண்டிப்புகளுக்கும் காரணங்களாகும். கடைசித் துண்டிப்பு இற்றைக்கு 7000 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டது.

இலங்கையில் மக்கள் குடியிருப்புக்கள் 130 000 வருடங்களுக்கு முன்னதாகவே இருந்தன என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் உள்ளன. பெரும்பாலும் இக்குடியிருப்புக்கள் 300 000 வருடங்கள் பழைமையானவை ஆகவும் இருக்கலாம். சிலவேளைகளில் இற்றைக்கு 500 000 வருடங்களுக்கும் முந்தியதாகவும் அமைந்திருக்கக்கூடும்.



*நாசாவால் வெளியிடப்பெற்றதும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ளதுமான புராதன பாலத்தின் படம்*

இது இவ்வாறிருக்க வேறுசில உண்மைகளும் வெளிப்பட்டுள்ளன. கடலில் அமிழ்ந்துபோன புராதன பாலம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் அமைந்துள்ளது. இதற்கு இப்போது இராமர் அணை (Adam's Bridge) என்று பெயர். ஆழமற்ற சங்கிலித் தொடரான மணல் திட்டுக்களாக இது 30 கிலோமீட்டர் வரை நீண்டுள்ளது. அண்மையில் இப்படத்தை நாசா வெளியிட்டது.

இப்பாலத்தின் தனித்துவமான வளைவையும் அதனை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பெற்ற பொருட்களையும் கொண்டு இது மனிதரால் ஆக்கப்பெற்றது என்பதைத் தெளிவாக்கியது.

இதிகாசக் கதைகளும் தொல்பொருள் ஆய்வுகளும் இலங்கையில் மனிதஇனம் வாழ்ந்ததற்கான முதலாவது அடையாளம் 1 750 000 வருடங்களுக்குப் முந்தியது என உறுதிசெய்கிறது. பாலத்தின் வயதும் இதற்கு ஒத்ததாகவே உள்ளது. ஏறத்தாள திருதயுகத்தில் அதாவது 1 700 000 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற வியக்கத்தக்க சம்பவங்களைக்கூறும் புராணக்கதையான இராமாயணத்திற்குத் தெளிவான ஆதாரமாக இந்தப்பாலம் பற்றிய ஆய்வுமுடிவு அமைகிறது.



www.theallpapers.com

QUESTIONS

**Marks**

(a) List the evidence to support the existence of human settlement in the region of South India. **3**

- ________________________________________
- ________________________________________
- ________________________________________

(b) Explain the significance of the title for Text 7. **4**

(c) What role does the sea play in each of these articles (Texts 6 and 7)? **3**

- ________________________________________
- ________________________________________
- ________________________________________


www.theallpapers.com

**Part B** (Question 8)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of a text by identifying, analysing, and responding to information;*
- *convey information coherently (structure, sequence, accuracy and variety of vocabulary and sentence structure) and appropriately (relevance, use of conventions of the text type).*

---

8. Read the text and then answer the question in 150–200 words in TAMIL on page 7.

## உணவுப் பழக்கம்

குறிப்பிட்ட சில உணவுவகைகள் தொடர்பாக அடிக்கடி மாறுபாடான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. சைவஉணவுப் பழக்கத்தை எடுத்துக்கொள்வோம்.

இக்காலத்தில் பலர் மருத்துவக் காரணங்களாலும், சீவகாருண்ணியம் முதலிய காரணங்களாலும் சைவர்களாக மாறி வருகின்றனர். இறைச்சி வகைகளில் காணப்படும் கொழுப்புச்சத்து இருதய நோய்களுக்குக் காரணமாகலாம் என்றும் கருதப்படுகிறது. பலர் உணவுக்காக விலங்குகளைக் கொல்வதை எதிர்த்து வருகிறார்கள்.

தாவர உணவு உண்பவர்களை மூன்று பிரிவினராக வகுக்கலாம். முதற்பகுதியினர் தூயசைவர்கள். இவர்கள் விலங்குகளில் இருந்து பெறப்படும் உணவு எதனையும் உண்ணாதவர்கள். அதாவது பால், பாற்பொருட்களைக் கூட உண்ணாதவர்கள். இரண்டாம் பகுதியினர் பாற்பொருட்களை உண்பார்கள், ஆனால் கடலுணவு, முட்டை, இறைச்சி வகைகள் எதனையும் உண்ணார். மூன்றாம் வகையினர் பாற்பொருட்களையும் முட்டையையும் தமது உணவில் சேர்த்துக் கொள்வார்கள். ஆனால் மீன் வகைகள், இறைச்சிவகைகள் என்பவற்றைச் சாப்பிடமாட்டார்கள்.

இவர்களுள் தூயசைவர்கள் மாத்திரமே உடலுக்குத் தேவையான சத்துக்களைப் பூரணமாகப் பெறஇயலாது போகலாம். குறிப்பாக வைற்றமின் $B_{12}$ அநேகமாக விலங்குகளில் இருந்து பெறப்படுவதால் இவர்களுக்கு இது கிடைக்காமல் போக வாய்ப்புண்டு. ஆனால் தானியங்கள், பருப்பு வகைகள், சோயா முதலிய உணவு வகைகளைத் தமது நாளாந்தச் சாப்பாட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணிச் செயற்பட்டுவரின், இவர்களும் இப்போஷாக்குக் குறைபாட்டைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இவர்கள் சிற்றசு (citrus) பழங்களை (எடுத்துக்காட்டாக எலுமிச்சை, தோடை முதலியனவற்றைத்) தமது உணவில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இதன் மூலம் தாவரஉணவில் குறைவாகக் கிடைக்கப் பெறுகின்ற இரும்புச்சத்தை இவர்களின் உடல் அதிகமாக உறிஞ்சிக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

QUESTION

You would like to become a vegetarian, but are not certain. Write a personal letter to a friend discussing your reservations. In your letter refer to the options raised in the above article.

நீர் ஒரு தாவர உணவு உண்பவராக வர விரும்புகிறீர். ஆனாலும் முற்றாகத் தீர்மானிக்கவில்லை. உமக்கு ஏற்படும் சந்தேகங்கள் பற்றி உமது நண்பருக்கு, தனிப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் கருத்துக்களை வெளிப்படுத்துக. மேலே தரப்பட்ட கட்டுரையில் உள்ள ஆலோசனைகளை அக்கடிதத்திற்குத் துணையாகக்கொள்க.



www.theallpapers.com

*Do not remove this page from the question booklet.*

Student/Registration Number

Centre Number

Tamil
Continuers Level

Question 8



PLEASE TURN OVER

www.theallpapers.com

**End of Section 2**



www.theallpapers.com

Student/Registration Number | | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2006 Public Examination

# Tamil
## Continuers Level

## Section 3: Writing in Tamil (15 marks)

**Instructions to Students**

1. Allow approximately 45 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

© *Victorian Curriculum and Assessment Authority 2006*

www.theallpapers.com

**Section 3** (Questions 9–12)
(15 marks)

---

*When judging performance in this section, the examiner(s) will take into account the extent to which the student demonstrates:*

- *relevance and depth of treatment of ideas, information, or opinions;*
- *accuracy and range of vocabulary and sentence structures;*
- *the capacity to structure and sequence response and capacity to use conventions of the text type.*

---

Answer ONE question from this section in 200–250 words in TAMIL.

9. Write an evaluative article for a youth magazine on the advantages and disadvantages of having mobile phones.

   கைத்தொலைபேசிகளை வைத்திருத்தல் தொடர்பான நன்மை தீமைகளை மதிப்பீடு செய்து இளைஞர் சஞ்சிகை ஒன்றுக்குக் கட்டுரை ஒன்றை எழுதுக.

10. You discover a huge red egg on a vacant block. From inside you hear an urgent tapping. What is about to hatch? Write an imaginative story for a newspaper competition.

    “திறந்த வளவு ஒன்றில் சிவப்புநிறமான பெரியதொரு முட்டையை நீர் காண்கிறீர். அதன் உள்ளிருந்து அவசரமாகத் தட்டும் சத்தம் கேட்கிறது. முட்டையிலிருந்து என்ன வெளிப்படக்கூடும்?” கற்பனைக்கதை ஒன்றை பத்திரிகைப் போட்டி ஒன்றுக்கு அனுப்புவதற்காக எழுதுக.

11. You have been asked to prepare an informative report on the 2006 Commonwealth Games for a newspaper in a Tamil-speaking country.

    பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப்போட்டி 2006 பற்றிய தகவல்களைத் தெரிவிப்பதான கட்டுரை ஒன்றை, தமிழ் பேசும் நாடொன்றின் பத்திரிகையில் வெளியிடுவதற்காகத் தயாரிக்குக.

12. As a senior student, write the text of a speech to be delivered to Year 7 students of your school to convince them about the advantages of learning more than one language.

    ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்பதினால் ஏற்படும் நன்மைகளை உணர்த்தக்கூடிய வகையில், மேல்வகுப்பு மாணவராகிய நீர் உமது பாடசாலை 7ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உரையாற்றப்போகிறீர். அந்த உரைப்பகுதியை எழுதுக.



www.theallpapers.com

You may make notes in this space.





www.theallpapers.com

Question Number:



www.theallpapers.com

PLEASE TURN OVER

www.theallpapers.com

**End of Section 3**



www.theallpapers.com